අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

## குடியியற் கல்வி

## வினாத்தாள் I & II



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது All Rights Resered

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு** | 62 | T | I, II |

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**குடியியற் கல்வி - I, II** — **நேரம் : 3 மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. கி.மு 6 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் குழுவாட்சி முறை நிலவிய குடியேற்றங்களில் ஒன்று.
(1) மகதம் (2) வஜ்ஜி (3) எதேன்ஸ் (4) பாண்டிச்சேரி

2. இங்கிலாந்தில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சிமுறை வளர்ச்சியடைய காரணமாயமைந்த புரட்சி
(1) பிரான்சியப்புரட்சி (2) ரஷ்யப்புரட்சி
(3) அமெரிக்கப்புரட்சி (4) ஆங்கிலப்புரட்சி

3. ஒரு கட்சி முறை ஆட்சி நிலவும் நாடுகளில் ஒன்று
(1) கியூபா (2) இலங்கை (3) நேபாளம் (4) சுவிட்சர்லாந்து

4. ஓர் அரசிற்கு வழங்கப்பட்டுள்ள அதிஉயர் அதிகாரத்தினை குறிக்கும் சொற்பதம்
(1) சனநாயகம் (2) சுதந்திரம் (3) இறைமை (4) உரிமை

5. பாராளுமன்ற அரசாங்க முறையில் அரசாங்கத்தின் தலைவர்
(1) சனாதிபதி (2) பிரதமர் (3) முடி (4) முதலமைச்சர்

6. எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய நிறுவனத்தினுள் குவிந்திருப்பின் அவ்ஆட்சி முறை
(1) கூட்டாட்சி (2) பாராளுமன்ற ஆட்சி
(3) ஒற்றையாட்சி (4) சனாதிபதி ஆட்சி

7. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு வழிவகுக்கும் ஆட்சிமுறை சமஷ்டியாகும். எனும் கருத்தை முன்வைத்தவர்.
(1) ஏ.வீ.டைசி (2) ஆபிரகாம் லிங்கன்
(3) அரிஸ்டோட்டில் (4) கலாநிதி.கே.சீ.வியர்

8. இலங்கையில் 1965 இல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமாக அமைவது.
(1) பண்டா – செல்வா ஒப்பந்தம் (2) டட்லி சேனநாயக்க – பண்டாரநாயக்க ஒப்பந்தம்
(3) இந்திய - இலங்கை ஒப்பந்தம் (4) டட்லி - செல்வா ஒப்பந்தம்

09. இலங்கையில் மாகாண சபையொன்றின் அமைச்சரவையின் எண்ணிக்கை.

(1) முதலமைச்சர் தவிர ஐந்து பேர்

(2) முதலமைச்சர் உட்பட ஐந்து பேர்

(3) ஆளுனர், முதலமைச்சர் உட்பட நான்கு பேர்

(4) ஆளுனர் உட்பட மூன்று பேர்

10. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய குடிப்பெயர்வு தொடர்பான காரணிகளில் ஒன்று.

(1) பண்டு வாசுதேவனும் குழுவினரும் வருகை

(2) சேனன், குத்திகன் வருகை

(3) அரேபியர் வருகை

(4) பண்டு பாரிந்த குழுவினர் வருகை.

11. நல்லாட்சியின் பண்புகளில் உள்ளடங்காதது

(1) அரச நிர்வாகிகள் பொறுப்புடன் செயற்படல்

(2) அரச நிர்வாகம் வினைத்திறனாகச் செயற்படல்

(3) அரச சேவை அரசியல் மயப்படுத்தப்படாமை

(4) இலஞ்சம், ஊழல் உயர்வடைந்து காணப்படல்

12. இலங்கையில் இன அடிப்படையிலும், சமய அடிப்படையிலும் அதிக எண்ணிக்கையைக் கொண்டவர்கள் முறையே

(1) தமிழர் - இந்து

(2) சிங்களவர் - பௌத்தம்

(3) முஸ்லிம் - இஸ்லாம்

(4) சிங்களவர் - கத்தோலிக்கர்

13. வளங்கள் தேவையிலும் பார்க்க குறைவாக காணப்படும் நிலை

(1) அருமை (2) தேவை (3) உற்பத்தி (4) விருப்பம்

14. முதலாளித்துவ பொருளாதார முறையொன்றினை பின்பற்றும் நாடாக கருதப்படுவது

(1) சீனா (2) இந்தியா (3) ஐக்கிய அமெரிக்கா (4) இலங்கை

15. மோதல் தீர்வுச் செயன்முறையில் நடுநிலையாளரிடம் காணப்பட வேண்டிய பண்புகளில் ஒன்று

(1) விசாரணை செய்யும் ஆற்றல் குறைவாக இருத்தல்

(2) அனுபவ முதிர்ச்சி உடையவராக இருத்தல்

(3) பக்கச் சார்புள்ளவராக இருத்தல்

(4) அர்ப்பணிப்பற்றவராக இருத்தல்

16. ஐக்கிய அமெரிக்க சமஷ்டி முறையில் மானில அரசுக்குரிய அதிகாரங்களில் ஒன்று

(1) உள்ளூராட்சி பெருந்தெருக்கள்

(2) நிதி நடவடிக்கைகள்

(3) வரி அளவிடலும் அறவிடலும்

(4) தேசிய பொருளாதார அபிவிருத்தி

17. கிளிநொச்சி நிர்வாக மாவட்டம் எத்தேர்தல் மாவட்டத்தில் உள்ளடங்குகிறது.

(1) வன்னி (2) திகாமடுல்ல (3) மட்டக்களப்பு (4) யாழ்ப்பாணம்

18. சர்வதேச ரீதியாக பல மில்லியன் மனித உயிர்களையும், சொத்துக்களையும் அழித்த யுத்தமாகக் கருதப்படுவது.

(1) முதலாம் உலக மகாயுத்தம் (2) ரஷ்ய – உன்ரைன் யுத்தம்

(3) இஸ்ரேல் - பலஸ்தீன யுத்தம் (4) இரண்டாம் உலக மகாயுத்தம்

19. பின்வரும் “அ” நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், “ஆ” நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட மன்றங்களுடன் சரியாக பொருந்தும் விடையை தெரிவு செய்க.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| 1) | குறூமக்கலம் யாப்பு (1910) | A | அரசுக்கழகம் |
| 2) | டொனமூர் யாப்பு (1931) | B | தேசிய அரசுப் பேரவை |
| 3) | முதலாம் குடியரசு யாப்பு(1972) | C | பாராளுமன்றம் |
| 4) | இரண்டாம் குடியரசு யாப்பு(1978) | D | சட்டவாக்க கழகம் |
| | | E | இருசபைப் பாராளுமன்றம் |

(1)ECBD (2) DCBA (3) DABC (4) BAEC

20. சட்டத்தின் இயல்புகளுக்கு பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற கூற்றினை தெரிவு செய்க.

(1) சமூக நன்மையை நோக்கமாகக் கொண்டு விதிக்கப்பட்டிருக்கும்

(2) மனித நடத்தை மற்றும் செயற்பாடுகளை கட்டுப்படுத்தாத தன்மை காணப்படும்

(3) மாற்றமடைகின்ற சமூகத் தேவைகளுக்கு ஏற்ப மாறும் தன்மை கொண்டது

(4) அதிகாரத்தை அடைப்படையாகக் கொண்ட அரசினால் விதிக்கப்படுகின்றது.

21. ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டால் முறைப்பாடு செய்வதற்கு பொருத்தமான நீதிமன்றம்

(1) மேன்முறையீட்டு நீதிமன்றம் (2) உயர் நீதிமன்றம்

(3) மாவட்ட நீதிமன்றம் (4) மேல் நீதிமன்றம்

22. இலங்கையில் 1978 அரசியல் யாப்பின் படி மக்களின் கருத்துக்களை நேரடியாக அறியும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான ஏற்பாடாக அமைவது.

(1) மக்கள் தீர்ப்பு (2) சனாதிபதித் தேர்தல்

(3) மாகாணசபைத் தேர்தல் (4) உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

23. சமதர்ம பொருளாதார முறையொன்றின் அடைப்படைப் பண்புகளில் ஒன்று

(1)உற்பத்திக் காரணிகள் அனைத்தும் தனியார் உடமையாக்கப்பட்டிருக்கும்

(2)இலாபத்தை நோக்காகக் கொண்டு காணப்படும்

(3) போட்டித்தன்மை வாய்ந்த சந்தை முறை காணப்படும்

(4) உற்பத்திக் காரணிகள் அனைத்தும் அரசுடமையாக்கல்

24. பொதுநலவாய அமைப்பின் தோற்றத்திற்கு காரணமாய் அமைந்த அறிக்கை

(1) வேர் செயில்ஸ் அறிக்கை

(2) டர்ஹம் கொமிசன் அறிக்கை

(3) சான்பிரான்சிஸ்கோ அறிக்கை

(4) வெஸ்ரவோல்ட் அறிக்கை

25. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பிரகடனம் 30 உறுப்புரைகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் 3 – 27 வரையான உறுப்புரை.

(1) மனித உரிமைகளின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

(2) அடைப்படை உரிமைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது

(3) பல்வேறு உரிமைகளையும் அட்டவணைப்படுத்தியுள்ளது

(4) பல்வேறு மனித உரிமைகள் தொடர்பான கடமைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது

26. சிறுவர் உரிமை சமவாயத்தின் படி சிறுவர்கள் எனப்படுவோர்

(1) 18 வயதுக்கு குறைந்தோர் (2) 16 வயதுக்கு குறைந்தோர்

(3) 12 வயதுக்கு குறைந்தோர் (4) 21 வயதுக்கு குறைந்தோர்

27. உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் அவை பயன்படுத்தப்படும் விதத்திற்கு ஏற்ப இடைநிலைப் பொருளாக காணப்படுவது

(1) கட்டடங்கள் (2) மருந்துகள்

(3) உணவுப் பொருட்கள் (4) பலகை

28. கேகாலை நிர்வாக மாவட்டத்தினை உள்ளடக்கிய மாகாணம்

(1) வட மத்திய மாகாணம் (2) ஊவா மாகாணம்

(3) சப்ரகமுவ மாகாணம் (4) மத்திய மாகாணம்

29. தனிநபர் ஒருவர் மற்றொரு நபரின் வாழ்க்கைக்கும், சொத்துக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் போது அச்சட்டம்

(1) குற்றவியல் சட்டம் (2) அரசியல் யாப்பு சட்டம்

(3) இராணுவச் சட்டம் (4) குடியியல் சட்டம்

30. மனிதன் பௌதிக வளங்களை வரையறை இன்றி பயன்படுத்த தொடங்கியமைக்கான சந்தர்ப்பமாக அமையாதது.

(1) நகராக்கம்

(2) கைத்தொழில் மயமாக்கம்

(3) உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தாமை

(4) விவசாய மயமாக்கம்

31. நிலையான அபிவிருத்தியில் பிரசை ஒருவரின் கடமைகளில் ஒன்று

(1) முறையற்ற கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(2) சூழல் நேயமற்ற வாழ்க்கை முறை

(3) அபரிமிதமான நுகர்வை ஏற்படுத்தல்

(4) சூழல் நேய மனப்பாங்கு விருத்தி

32. இலங்கைக்கு வெளிநாட்டு உதவி வழங்கும் அமைப்புக்களில் அதிக பங்களிப்புச் செய்யும் நிதி நிறுவனம்

(1) மத்திய வங்கி (2) சர்வதேச நாணய நிதியம்

(3) ஐரோப்பிய ஒன்றியம் (4) உலக வர்த்தக மையம்

33.1978 இலங்கை சனநாயக சோசலிச குடியரசு யாப்பின் படி நிறைவேற்று ஜனாதிபதி வகிக்காத பதவிகளில் ஒன்று

(1) அரசின் தலைவர் (2) அரசாங்கத்தின் தலைவர்

(3) பாராளுமன்றத்தின் தலைவர் (4) முப்படைகளின் தலைவர்

34. இலங்கையில் அதிகளவு உள்ளூராட்சி மன்றங்களைக் கொண்ட மாகாணமாக கருதப்படுவது

(1) தென் மாகாணம் (2) மத்திய மாகாணம்

(3) கிழக்கு மாகாணம் (4) வடமேல் மாகாணம்

35. சட்டவாட்சியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான மூன்று பண்புகளைப் பற்றிக் குறிப்பிட்டவர்

(1) G.மார்ஷல் (2) A.V டைசி

(3) T.H கிறீன் (4) ஜீன் போடின்

36. வளிக் கோளத்தில் 99.9% னை உள்ளடக்கிய வாயுக்கள்

(1) நைதரசன், ஒட்சிசன் ,கீலியம் (2) ஒட்சிசன், ஆகன், கீலியம்

(3) நைதரசன், ஒட்சிசன் , ஆகன் (4) நைதரசன், ஒட்சிசன்

37. ஓர் அரசு ஒன்றின் உயர்சட்டமாகக் கருதப்படுவது

(1) சட்ட வல்லுநர்களின் கருத்துக்கள் (2) அரசியல் யாப்புச் சட்டம்

(3) பல்வேறு கட்டளைச் சட்டங்கள் (4) நீதிமன்ற தீர்ப்புக்கள்

38. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை கொண்ட நாடுகளில் ஒன்று

(1) இந்தியா (2) அவுஸ்ரேலியா (3) கனடா (4) பிரான்ஸ்

39. அபிவிருத்தி அளவீடுகளில் பாரம்பரிய முறைகளில் ஒன்று

(1) மனித வறுமைச் சுட்டி (2) மொத்த தேசிய உற்பத்தி

(3) மனித அபிவிருத்தி சுட்டி (4) பௌதீக வாழ்க்கை பண்புச் சுட்டெண்

40. இலங்கையில் ஆதிவாசிகள் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று

(1) ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாக்க வனப்பாதுகாப்பு திணைக்களம் உருவாக்கப்பட்டுள்ளது

(2) ஆதிவாசிகள் ஒரு விசேட கலாசாரத்திற்கு உரிதாகின்றனர்.

(3) இலங்கையில் வாழும் ஆதிவாசிகள் வேடுவர் சமூகம் என அழைக்கப்படுவர்

(4) ஆதிவாசிகளின் உரிமைகளை மதிப்பது அனைத்து பிரசைகளதும் கடமையாகும்.

(1X40 = 40 புள்ளிகள்)

**

முழுப் பதிப்புரிமையுடையது All Rights Resered

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு** | **62** | **T** | **I, II**

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

**குடியியற் கல்வி - I, II**

**குடியியற் கல்வி - II**

**அறிவுறுத்தல்கள்**

* **முதலாம்** வினா கட்டாயமானது
* **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

1. (I) ஜனநாயக சமூகமொன்றின் பிரசைகளின் கடமைகள் **இரு** வகைப்படும் அவை யாவை.
   (II) மாகாணசபையொன்றின் மூன்றாவது நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (III) இலங்கையில் பன்மை பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்தும் அமைவிடம் தொடர்பான காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (IV) சமதர்மப் பொருளாதாரத்தின் சந்தை இயல்பினை அதிகமாகக் கொண்டிருக்கும் **இரண்டு** நாடுகளைத் தருக.
   (V) மோதலை தீர்க்கும் முறைகளில் **இரண்டினைக்** குறிப்பிடுக.
   (VI) உரிமையுடன் தொடர்புடைய செயற்பாடுகள் **இருவகைப்படும்** அவை யாவை.
   (VII) இலங்கையில் செயற்படும் சட்டத்தொகுதிகளில் **இரண்டைக்** குறிப்பிடுக.
   (VIII) வளங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக உலகளாவிய ரீதியில் கைக்கொள்ளப்படும் வழிமுறைகள் **இரண்டு** தருக.
   (IX) சார்க் நாடுகளிடையே ஏற்படுத்திக் கொண்டுள்ள **இரு** ஒப்பந்தங்கள் யாவை.
   (X) 1947 சோல்பரி பாராளுமன்றத்தின் **இரு** சபைகளையும் உறுப்பினர் எண்ணிக்கையுடன் குறிப்பிடுக.

(02 X 10 = 20 புள்ளிகள்)

2. சனநாயகம் என்பது அனைவரது உரிமைகளையும் பெற்றுக் கொடுக்கும் ஒரு ஆட்சி முறையாகும்.
   (I) பிரதிநிதித்துவ சனநாயகம் என்ற எண்ணக்கருவை சுருக்கமாக அறிமுகப்படுத்துக. (2 புள்ளிகள்)
   (II) தேர்தல் தொகுதிகள் மூலம் பிரதிநிதிகளை தெரிவு செய்வதன் நன்மைகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)
   (III) (a) சனநாயக ஆட்சி முறை இடம்பெறும் ஒரு நாட்டில்அரசியல் யாப்பிற்கமைய செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)
   (b) மேலே (a) இல் குறிப்பிட்ட பண்புகளில் **ஒன்றை** விளக்குக. (2 புள்ளிகள்)

3. பிரசைகளின் தேவைகளை உச்ச அளவில் நிறைவேற்றுவது சனநாயக அரசாங்கமொன்றினது பிரதான கடமையாகும்.

(I) இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்ற **இரு** வழிமுறைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(II) இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள **மூன்று** வகையான செயற்பாடுகளும் யாவை. (3 புள்ளிகள்)

(III) (a) சமூக அபிவிருத்திக்கும், நல்லாட்சிக்கும் உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளக்கூடிய பங்களிப்புக்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்புக்களில் **ஒன்றினை** விளக்குக. (2 புள்ளிகள்)

4. மோதல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களை இழிவளவாக்குதல் பிரசைகள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்

(I) தனிநபரிடம் காணப்படவேண்டிய சமூகப் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(II) ஜொஹான் கல்டூன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மோதல் முக்கோணியின் **மூன்று** படி நிலைகளையும் குறிப்பிடுக. (3புள்ளிகள்)

(III) (a) மோதல்களை சமாதனமாக தீர்ப்பதனால் ஏற்படும் பயன்களில் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட பண்புகளில் **ஒன்றை** விளக்குக. (2 புள்ளிகள்)

5. நீதித்துறையின் சுதந்திரத்தையும், சுயாதீனத்தையும் பாதுகாத்தல் நம் அனைவரினதும் பொறுப்பாகும்

(I) தற்போது இலங்கையில் செயற்படும் நீதிமன்றங்களில் மேன் நிலை நீதிமன்றங்கள் **இரண்டையும்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(II) சட்டமா அதிபிரின் கீழ் செயற்படும் அதிகாரிகள் **மூவரைக்** குறிப்பிடுக. (3புள்ளிகள்)

(III) (a) பிரதம நீதியரசரின் பணிகள் **மூன்றைக்** குறிப்பிடுக (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட பணிகளில் **ஒன்றை** விளக்குக. (2 புள்ளிகள்)

6. வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தி அபிவிருத்தியை ஏற்படுத்தவது பிரசை ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

(I) பேண்தகு அபிவிருத்தி என்றால் என்ன. (2புள்ளிகள்)

(II) பேண்தகு அபிவிருத்தியில் பிரசை என்றவகையில் உம்மால் மேற்கொள்ளக்கூடிய கடமைகள் **மூன்று** தருக. (3புள்ளிகள்)

(III) (a) இலங்கையில் பேண்தகு அபிவிருத்தியை பேணிச் செல்வதற்கு அரசினால் நிறைவேற்றப்பட்ட வேண்டிய கடமைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிடப்பட்ட பிரசைகளின் கடமைகளில் **ஒன்றினை** விளக்குக. (3 புள்ளிகள்)

7. நாடுகளுக்கிடையிலான உதவிகள், ஒத்தாசைகள் என்பன மனித அபிவிருத்திக்குஅவசியமாகின்றன.

(I) சர்வதேச உறவுகள் வளர்ச்சியடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2புள்ளிகள்)

(II) சர்வதேச உறவுகள் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தும் விதங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3புள்ளிகள்)

(III) (a) சர்வதேச உறவுகளின் விளைவுகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட விளைவுகளில் **ஒன்றினை** விளக்குக. (2 புள்ளிகள்)

***